இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 27.06.2026

# விஜய்யின் மூன்றாவது பித்தலாட்டம்!

வாக்குறுதியை நிறைவேற்றுகிறேன் என்று கணக்குக் காட்டுவதற்காக முதலமைச்சர் விஜய் செய்யும் அறிவிப்புகள் பித்தலாட்டமானதாக இருக்கின்றன.

★ **முதல் பித்தலாட்டமான அறிவிப்பு, 200 யூனிட்டுகள் வரை மின்சாரம் இலவசம்.**

★ **இரண்டாவது பித்தலாட்டமான அறிவிப்பு, பயிர்க்கடன் ரத்து.**

★ **மூன்றாவது பித்தலாட்டம், பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் திட்டம் - இப்படி வரிசையாக அறிவிக்கும் அத்தனை திட்டங்களும் அவர் கொடுத்த வாக்குறுதிகளை அவரே மீறுவதாக அமைந்துள்ளன.**

இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளுக்கு 200 யூனிட் வரை மின்சாரத்துக்கு கட்டணமில்லை என்று அரசாணை வெளியிட்டார் விஜய். இதுதான் அவரது முதல் கையெழுத்து ஆகும். ஆனால் தேர்தலுக்கு முன்னதாக அவர் வெளியிட்ட அறிக்கையில், தகுதி வாய்ந்த வீடுகளுக்கு ஒவ்வொரு மாதமும் 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது. தேர்தல் அறிக்கையில் சொன்னது வேறு. வெற்றி பெற்றதற்குப் பிறகு செய்தது வேறு.

‘ஒவ்வொரு குடும்பத்துக்கும் 200 யூனிட்டுகள் கட்டணமில்லா மின்சாரம்’ என்பதுதான் அவரது வாக்குறுதி ஆகும். 500 யூனிட்டுக்குள், 500 யூனிட்டுக்கு மேல் என்று முதலமைச்சர் விஜய் தனது அறிக்கையில் சொல்லவில்லை. இப்போது செய்திருப்பது முதல் பித்தலாட்டம் ஆகும்.

அடுத்ததாக ஒட்டுமொத்த உழவர்கள் தலையில் மிளகாய் அரைத்தார் விஜய். “5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு அவர்கள் வைத்திருக்கும் பயிர்க்கடனில் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படும்” என்று விஜய் அள்ளி விட்டார்.

முதலமைச்சர் ஆனதும் விஜய் போட்டுள்ள உத்தரவு இதற்கு மாறானது ஆகும். கூட்டுறவு வங்கிகளில் 50 ஆயிரம் வரை பயிர்க்கடன் பெற்ற குறு விவசாயிகளுக்கு முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும். அதற்கு மேல் இருந்தால் அந்தக் கடனில் 50 விழுக்காடு வரை கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார் விஜய். இது ஒட்டுமொத்த உழவர்களை ஏமாற்றியது. அவர்கள் கடுமையாக போராடத் தொடங்கியதும், 75 ஆயிரம் வரை பயிர்க்கடன் பெற்றவர்களுக்கு தள்ளுபடி என்று அறிவித்துள்ளார். இதுவும் அவரது வாக்குறுதியை அமல்படுத்துவது ஆகாது. இது முதலமைச்சர் விஜய்யின் இரண்டாவது பித்தலாட்டம் ஆகும்.

முதலில் பொதுமக்களை ஏமாற்றினார் விஜய். அடுத்ததாக உழவர்களை ஏய்த்தார். அடுத்து மூன்றாவதாகச் செய்துள்ள பித்தலாட்டம், பிறக்கப் போகும் குழந்தைகளை ஏமாற்றுவது ஆகும்.

தமிழ்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தங்க மோதிரம் வழங்கப்படும் என தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தார் விஜய். ஆனால், தற்போது, அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டும் தங்க மோதிரம் வழங்கப்படும் என அரசாணை வெளியிட்டுள்ளது த.வெ.க. அரசு.

‘தமிழ்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் வரவேற்கும் விதமாக தங்க மோதிரம் வழங்கப்படும்’ என தேர்தல் பிரச்சாரத்தில் விஜய் பேசிய வீடியோ ஆதாரம் இருக்கிறது.

“தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம். உலகத்துல மனுஷனா பிறக்கிறதே பெரிய விஷயம். அதுவும் நம்ம தாய்நாடான தமிழ்நாட்டுல பிறக்கிறது மிகப்பெரிய வரம். அப்படி நம்ம தமிழ்நாட்டுல பிறக்கிற குழந்தைகளை வரவேற்கிற திட்டம் தான் ‘தாய்மாமன் தங்கமோதிரம்’ திட்டம். தமிழ்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் அரசாங்கத்தின் ஆசீர்வாதமாக ஒரு தங்கமோதிரம் வழங்கப்படும். கூடவே ஒரு ‘பேபி வெல்கம் கிட்டும்’ வழங்கப்படும்.” - இதுதான் விஜய் பயன்படுத்திய வார்த்தைகள் ஆகும்.

ஆனால் இப்போது அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் என்று சுருக்கிவிட்டார் விஜய். தமிழ்நாட்டில் நிரந்தரமாக வசிக்கும் என்றும் விதிமுறை சேர்க்கப்பட்டுள்ளது. முன்பு எத்தனை கிராம் என்று சொல்லவில்லை. இப்போது ஒரு கிராம் என்று சொல்லப்பட்டுள்ளது.

200 யூனிட் மின்சாரத்திலும் பயிர்க்கடன் ரத்திலும் செய்யப்பட்ட அதே பித்தலாட்டம்தான் இதிலும் செய்யப்பட்டுள்ளது.

**தேர்தல் பரப்புரையின் போது என்ன சொன்னார் விஜய்? ‘மற்றவர்களைப் போல வாக்குறுதிகளை நான் அள்ளிவிட மாட்டேன். நிறைவேற்றக் கூடிய சாத்தியமான வாக்குறுதிகளைத்தான் சொல்வேன்’ என்றார். இப்போது ஏன் அவரால் செய்ய முடியவில்லை? ஏன் சாத்தியம் ஆகவில்லை? அவர் சொன்னவை அனைத்தும் கப்சாக்கள். வாய்க்கு வந்ததை எல்லாம் வாக்குறுதியாகக் கொடுத்தார்.**

**இன்னும் கேட்டால், ‘நீங்கதான் கஜானாவுக்குப் பணம் வரும் வழிகளை எல்லாம் அடைத்து வைத்துவிட்டீர்களே’ என்பார். தமிழ்நாடு இரண்டாவது பொருளாதார மாநிலமாக வளர்ந்து விட்டது என்ற சாதனையை தனது நெற்றியில் ஒட்டிக் கொள்வதும் அவர்தான்.**

கடந்த கால ஆட்சியின் சாதனைகள் தொடரும் என்பார். ஆனால் ‘நான் முதல்வன்’ போன்ற திட்டங்களின் பயனை மறைப்பார்.

‘திராவிட மாடல்’ ஆட்சியில், தனது கனவுத் திட்டமாக ‘நான் முதல்வன்’ திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். இதையே உல்டா பண்ணி செயல்படுத்தத் தொடங்கி இருக்கிறார் விஜய். பிரதமர் மோடியைச் சந்தித்த போது, “ஆண்டுதோறும் ஐந்து இலட்சம் இளைஞர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய பணியிடைப் பயிற்சிகள் (Internships) மற்றும் தொழில்துறையுடன் இணைந்த திறன் பயிற்சிகளை வழங்கும் “இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு இயக்கத்தை” (Youth Skill and Employment Mission) செயல்படுத்த விழைகிறேன்” என்று சொல்லி இருக்கிறார் விஜய். அதே திட்டம்தான், பெயர்தான் வேறு. கொஞ்சம் கூட கூச்சமே இல்லாமல் இதைச் செய்துள்ளார்.

**அதைப் பற்றி எல்லாம் அவர் கவலைப்படும் ரகம் அல்ல. கோட், சூட் போட்டுக் கொண்டு பித்தலாட்டம் செய்தால் யாரும் கேட்க மாட்டார்கள். கதை சொல்லி, சைகை காட்டி ‘ரீல்ஸ்’ விட்டு மக்களைத் திசை திருப்பி நாட்களை கடத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறார் விஜய்.**





கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.6.2026) அவரது இல்லத்தில், தே.மு.தி.க. பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ., தே.மு.தி.க. பொருளாளர் எல்.கே. சுதீஷ் எம்.பி. ஆகியோர் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினர்.

### இதைவிட பெரிய அடக்குமுறைகளையே பார்த்தவர்கள் நாங்கள்!

# ஆளுங்கட்சியினரின் மிரட்டலுக்கெல்லாம் தி.மு.க. அஞ்சாது!

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு இல்லத்தில் ரெய்டு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஜூன் 27-

முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சர் எ..வ. வேலு அவர்களின் இல்லத்தில் லஞ்ச ஒழிப் புத் துறையினர் ரெய்டு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத ளப்பதிவில் “இதைவிட பெரிய அடக்கு முறைகளையே பார்த்த இயக்கம் தி.மு.கழகம்! எனவே ஆளுங்கட்சியின் மிரட்டல்களுக் கெல்லாம் அஞ்சுகின்ற இயக்கமல்ல தி.மு.க.” என்று கூறியுள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் - அன்புச் சகோதரர் எ.வ. வேலு அவர்களின் வீட்டில் தமிழ்நாடு அரசின் DVAC ரெய்டு நடத்தி வருகிறது. அதற்கு அவர் முழு ஒத்துழைப்பை வழங்கி வருகிறார். சட்டப்படி எதிர்கொண்டு, நீதிமன்றத்தில் அவர் தரப்பு நியாயத்தை நிரூபிப்பார்.**

**அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடன், தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ஊழல் என இதுவரை தொடரப்பட்ட ஒரு வழக்கில்கூட குற்றச் சாட்டுகளை நிரூபிக்க முடிந்த தில்லை என்பதே வரலாறு.**

**ஆளும்கட்சியினரின் இந்த மிரட்டலுக்கெல்லாம் அஞ்சிடும் இயக்கம் அல்ல தி.மு.க.! இதைவிடப் பெரிய அடக்குமுறை களையே பார்த்தவர்கள் நாங்கள்.**

**இதையும் எதிர்கொண்டு வெற்றி பெறுவோம்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### சட்டப்பேரவையில் முதல்வரின் தவறான தகவலை சுட்டிக் காட்டியதற்கு ரெய்டா?

# த.வெ.க. அரசின் பழிவாங்கும் மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம்! சட்டப்படி வழக்கைச் சந்திப்பேன்!

## சோதனை குறித்து — முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

**சென்னை, ஜூன் 27-**

**சட்டப் பேரவையில் முதல்வரின் தவறான தகவலை சுட்டிக் காட்டியதற்கு ரெய்டா? என்றும், த.வெ.க. அரசின் பழிவாங்கும் மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம்! சட்டபடி வழக்கை சந்திப்பேன்! எனவும், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேட்டியளித்தார்.**

தி.மு.க. முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு வீடு உள்ளிட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை (DVAC) அதிகாரிகள் சோதனை நடத்தினர். கரூரில் உள்ள நெடுஞ் சாலைத் திட்டங்களில் முறைகேடு எனக்கூறி நேற்று முன்தினம் இந்த சோதனை மேற்கொண்டனர்.

இச்சோதனை குறித்து முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு எம்.எல்.ஏ. செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் இரவு அளித்த பேட்டி வருமாறு:-

த.வெ.க. அரசின் எண்ணம் என்றால் பழி வாங்கக் கூடிய ஒரு நோக்கமாக தான் இதை நான் பார்க்கிறேன். புதிதாக அமைக்கப்பட்ட தமிழக அரசு சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும் என பல்வேறு குற்றச்சாட்டுகளை அடுக்கி பின்னர் எதிர்க்கட்சித் தலை வர் பேச வேண்டும் என வாய்ப்பு வழங்க கூறினேன்.

மேலும் தமிழ்நாடு அரசு சார்பில் வைக்கப்பட்ட குற் றச்சாட்டுகளுக்கு ஆதாரம் அளிக்க வேண்டுமென கூறி அதுதான் அரசியல் மரபு என நாங்கள் பேசினோம்.

அன்றைக்கு நான் சட்டப்பேரவையில் கொறடா என் கின்ற நோக்கில் கேட்ட கேள்வியை மனதில் வைத்துக் கொண்டு, இந்த அரசு பழிவாங்கக் கூடிய ஒரு நோக்க மாக இந்த சோதனையை மேற்கொண்டுள்ளது.

**திருவண்ணாமலை கல்லூரியில் சோதனை — மாணவர்கள் பாதிப்பு!**

சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டினை மையப்படுத்தி தான் எனக்கு சொந்தமான மற்றும் எனக்கு தொடர்புடைய இடங்களில் சோதனை மேற்கொண்டனர். எனக்கு இரண்டு இடங்கள் மட்டுமே சொந்தமாக உள்ளது. மாறாக திருவண்ணாமலை மாவட்டத்தில் இயங்கி வரக் கூடிய ஒரு கல்லூரியில் சோதனை மேற்கொள்வதாக கூறி காலை முதல் மாலை வரை மாணவர்களை படிக்க விடாமல் செய்து மாணவர்களின் மனநிலையை புண்ப டுத்தக்கூடிய ஒரு நோக்கில் இந்த சோதனை மேற்கொண் டுள்ளார்கள்.

**சோதனைகளுக்கு எல்லாம் நாங்கள் பயப்படமாட்டோம்!**

இது போன்ற செயல்களில் தமிழக வெற்றிக்கழக அரசு ஈடுபட்டால் நாங்கள் பயந்து விடுவோம் என்று எண் ணுகிறது. நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர்கள் இது போன்ற அச்சுறுத்தல்களுக்கு ஒரு பொழுதும் பயப்பட மாட்டோம்.

**நீதிமன்றத்தில் நிரபராதி என நிரூபிப்பேன்!**

இந்த சோதனை தொடர்பாக நீதிமன்றத்தை தற்போது நாடி உள்ளோம் கண்டிப்பாக நீதிமன்றத்தில் நான் நிரபராதி என நிரூபித்து காட்டுவேன்.

நான் எந்த தவறும் செய்யாத ஒருவன், பரிசுத்தமான வன் என்பதை நீதிமன்றம் வாயிலாக நினைப்பேன்.

எனது தலைவர் மீசாவில் ஓராண்டு காலம் சிறையில் இருந்துள்ளார். எங்களது அரசு மிகச் சிறப்பாக மக்களின் நான் கருதி நடத்தி காட்டியுள்ளோம்.

**ரூ. 40 இலட்சம் பறிமுதல் என்பது பொய்!**

என்னிடம் இருந்து 40 லட்சம் பறிமுதல் செய்யப்பட் டது என்பதை முழுக்க முழுக்கமான ஒரு பொய்.

குறிப்பாக எனது சென்னை அலுவலகத்திலும், எனது சொந்த ஊர் கிராமத்திலும் இந்த பணம் பறிமுதல் செய் யப்படவில்லை.

குறிப்பாக பொதுப்பணித்துறை அமைச்சராக நான் இருந்த பொழுது நான் ஆய்வுக்காக மேற்கொள்ளக்கூடிய சுற்றுப் பயணங்கள் மற்றும் ஆய்வு மேற்கொண்ட புகைப்படங்கள் அனைத்தும் கணினி வழியாக தான் பகிர்வேன். அதன் காரணமாக அந்த கணினியை பறி முதல் செய்ய வேண்டும் என கேட்டு கொண்டனர். நானும் அதற்கு மறுப்பு தெரிவிக்காமல் தாராளமாக எடுத் துக் கொண்டு செல்லுங்கள் என தெரிவித்து வழங்கி



விட்டேன். எனது கழக செயல்பாடுகள் தொடர்பாகவும் எனது செயல்பாடுகள் தொடர்பான விவரங்கள் மட்டுமே அதில் இருக்கும் அதன் காரணமாகவே அதனை வழங்கி விட்டேன். அதை அவர்கள் பார்த்துவிட்டு திருப்பி தருவ தாக தெரிவித்துள்ளார்கள்.

**டெண்டர் விவகாரம் எல்லாம் இல்லத்தில் இருக்காது!**

கரூர் மாவட்டம் விவகாரம் பொறுத்தவரையில் ஒரு அலுவலகத்தில் தோட்டக்கலை நிறுவனத்தில் ஒரு டெண்டர் போட வேண்டும் என்றால் அதன் ஆவணங் கள் சம்பந்தப்பட்ட இடத்தில் மட்டுமே இருக்கும் ஒரு அமைச்சரின் இல்லத்தில் இருக்காது. நெடுஞ்சாலைத்து றையில் டெண்டர் விடுவதற்கான அதிகாரம் இரண்டு அதிகாரிகளுக்கு மட்டுமே உள்ளது. எனவே அதற்கான ஒப்புதல் ஆவணம் அதிகாரியிடம் மட்டுமே இருக்குமே தவிர எனது இல்லத்தில் இருப்பதற்கான வாய்ப்பு இல்லை.

**சோதனை என்பது அதிகாரத்தின் உச்சம்!**

இந்த லஞ்ச ஒழிப்பு சோதனை என்பது அதிகாரத்தின் உச்சமாகவே நான் பார்க்கிறேன். ஜனநாயகத்தின்படி எதிர்க்கட்சியாக எங்களுக்கு கேள்வி கேட்க உரிமை உண்டு. அதன் அடிப்படையில் தான் நான் சட்டப்பேர வையில் எதிர்க்கட்சி சார்பில் கேள்விகளை கேட்டேன். எங்களைப் போன்று மொழிப்போருக்காக சிறை சென்றும், மக்களுக்காக பணிகளையும் முதல்வர் ஈடுபட்டாரா?

நாங்கள் மக்களுக்காக பாடுபட்டவர்கள், இந்த சோதனை முழுக்க முழுக்க அதிகாரத்தின் உச்சம்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எ.வ. வேலு செய்தி யாளர்களுக்கு பேட்டியளித்தார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** **ஏன் தம்பி;** முதல்வர் விஜய் 23 ஆம் தேதியன்று, தனது பதிலுரையின் முடிவில், குட்டிக் கதை என்று ஒன்றைக் கூறி, சைகை மூலம் ஒரு செயலைச் செய்தது அவையின் விதி மீறல் என்று முன்னாள் பேரவைத் தலைவர் அப்பாவு கூறியிருக்கிறாரே ?

**பட்டணம் : ஆமாமய்யா; “தமிழ்நாடு சட்டப் பேரவை விதிப்படியும், மரபுப் படியும், பேரவையில் இல்லாத ஒருவரைப் பற்றி நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ, வாய் மொழியாகவோ அல்லது உடல் மொழி யாகவோ விமர்சனமோ அல்லது கிண்டலோ, கேலியோ செய் யக்கூடாது” என்று அப்பாவு விளக்கி உள்ளார்.**

**விதிக்கு நேர்ந்த விதி இது என்று வேதனை கொள்வதைத் தவிர வேறு என்ன சொல்ல ?**